புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2024** **02 அக்டோபர், 2024**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி அரசு சார்பில் மகாத்மா காந்தியடிகளின் 156-வது பிறந்த நாள் விழா கடற்கரை சாலை, காந்தி திடலில் இன்று (02-10-2024) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு காந்தியடிகளின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு. ந. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. R. செல்வம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு க. லட்சுமிநாராயணன், மாண்புமிகு வேளாண் அமைச்சர் திரு க. ஜெயக்குமார், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலம் & பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு சாய் ஜெ. சரவணன்குமார், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு பெ. ராஜவேலு, மாநிலங்களவை உறுப்பினர் திரு S.செல்வகணபதி, அரசு கொறடா திரு A.K.D. ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சௌகான், காவல்துறை தலைமை இயக்குநர் திருமதி ஷாலினி சிங், அரசுத்துறைச் செயலர்கள், மாவட்ட ஆட்சியர் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், சர்வ மத பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து தேசபக்திப் பாடல்களும் காந்திய கீர்த்தனைகளும் இசைக்கப்பட்டன. பாரதியார் பல்கலைக்கூட மாணவர்கள் பாடல்களைப் பாடினர்.

அடுத்ததாக, பெருந்தலைவர் காமராஜரின் நினைவு நாளை முன்னிட்டு ராஜா திரையரங்கம் அருகில் காமராஜர் சதுக்கத்தில் உள்ள அன்னாரது சிலைக்கு துணைநிலை ஆளுநர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.